# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>(Chapter.. | ... | DEPOSITION OF WITNESS |
| Preliminary Register | ... | Case No. S.C.No.249/2024 |
| Sessions | ... | |
| Deposition of witness for | | Prosecution - P.W.4<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | சண்முகசாமி |
| Father's Name | த/பெ.வெள்ளக்கண்ணு |
| Village | அத்திமரப்பட்டி |
| Taluk | |
| Age | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.02.2026.

**(1, 2 எதிரிகள் ஆஜர்.)**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது தூத்துக்குடி அத்திமரப்பட்டி கீழத் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி பால்சன்துரை என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் 2 வதாக உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதை எங்கு வைத்து எதற்காக போட்டேன் என்று ஞாபகமில்லை. பார்வைமகஜரில் உள்ள எனது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பில் அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

போலிசார் விசாரணையில் 17.05.2024ம் தேதி காலை 11.30 மணியளவில் நானும் பால்சன்துரை என்பவரும் குலையன்கரிசல் செல்லும் ரோட்டில் உள்ள பாஸ்கரன் என்பரது வாழை தோட்டம் அருகில் வேலைவிசயமாக நின்றுகொண்டிருந்தோம் என்றும் அப்போது அங்கு வந்த முத்தையாபுரம் காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு பார்வைமகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும் நாங்கள் இருவலும் அதில் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை -</u> இல்லை.

**ஓம்/-R.V.ராஜகுமார்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**